# விபஸ்ஸனா செய்தி மடல்

## தமிழ் மாத இதழ்

(விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர்: 1 ★ இதழ்: 6 ★ ஆனி: 2022 ★ விலை: ₹ 2.50/- ★ ஆண்டு சந்தா : ₹ 30/-

## திரு. சத்திய நாராயண கோயங்கா

### அவர்களின் பாசுரங்கள்

உலக மக்களே, விழித்தெழுங்கள்
இருண்ட இரவு போய்விட்டது.
மகிழ்ச்சியான விடியற்பொழுதாகிய
தம்ம ஒளி வந்துவிட்டது.
பிரபஞ்ச உயிர்களே வாருங்கள்,
தம்மத் தெள்ளறிவைக் கவனமாகக் கேளுங்கள்.
மகிழ்ச்சியும், அமைதியும், சுதந்திரமும், விடுதலையும், நிப்பாணமும் இதில் தான் அடங்கியுள்ளது.

பிரபஞ்ச உயிர்களே வாருங்கள்,
தம்ம நெறியில் நாம் நடந்து செல்வோம். தம்ம நெறியே அமைதி நெறி,
தம்ம நெறியே மகிழ்ச்சி நெறி.
தொடக்கத்தில் பயன்தருவதும்,
நடுவில் பயன்தருவதும்,
முடிவில் பயன்தருவதுமான
ஒவ்வொரு அடியும் பயன்தருவதாகவே இருக்கிறது.
ஸீலத்தில் (ஒழுக்க நடத்தையில்) பயன் இருக்கிறது, ஸமாதியில் (மனக் குவிப்பில்) பயன் இருக்கிறது,
பஞ்ஞாவிலும் (தெள்ளறிவிலும்) பயன் இருக்கிறது நிப்பாணம் வரை இட்டுச்செல்கிறது.
இருண்ட சந்துகளில் எத்துணையோ நாட்கள்
நாம் அலைந்து திரிந்துவிட்டோம்!
இப்போது நாம் ராஜபாதையை அடைந்துவிட்டதால்,
இனி ஒருபோதும் நாம் பின்னோக்கிப் பாரோம்.
இப்போது நாம் தூய நெறியைத் அடைந்துவிட்டதால்,
நாம் இனி ஒருபோதும் பின்னோக்கிப் பாரோம்.

# புத்தரின்

## உயரிய மெஞ்ஞானம்

கபிலவஸ்துவின் இளவரசராக இருந்து, வீட்டைத் துறந்து துறவு நிலை மேற்கொண்ட போதிஸத்துவ சித்தார்த்த கௌதமர் தியான ஸமாதி பயிற்சியைக் கற்க மகத நாட்டிற்கு சென்றார். சமன பாரம்பரியத்தைச் சார்ந்த ஆளார காலாமரின் தியான மையக் கிளை ஒன்றிருப்பினும், முதன்மை ஆசிரியர் தங்கி இருக்கும் பிரதான மையமாக திகழ்ந்த மகத நாட்டு மையத்திற்கே கௌதமர் சென்றார். இரண்டு மூன்று நாட்களிலேயே போதிஸத்துவர் ஏழாவது தியான ஸமாதி நிலையை அடைந்தார். அவை மிகவும் மகிழ்வுமிக்கதாக இருப்பினும், அவைகளின் பயிற்சி தமக்கு பூரண விடுதலையை அளிக்கவில்லை என்பதை அவர் உணர்ந்தார்.

ஆகவே, அவர் ஆசிரியர் ஆளார காலாமரிடம் விடை பெற்றுக்கொண்டு, அதனினும் உயர்ந்த தியான ஸமாதிகளைக் கற்க ஆசிரியர் உத்தக இராமபுத்திரரிடம் சென்றார். இந்த ஆசிரியருக்கு எட்டாம் நிலை தியான ஸமாதியைப் பற்றிய கேள்வி அறிவு மட்டுமே இருந்ததால், அதை வைத்துக்கொண்டு சீடர்களுக்கு அதைப் பற்றி விளக்கியும் விவரித்தும் கூறுவார்; ஆனால் அவர் அனுபவ அளவில் அதனை அடைந்ததில்லை.

இந்த ஆசிரியரின் விளக்கவுரையை கேட்டதும், போதிஸத்துவர் இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவே எட்டாம் நிலை தியான ஸமாதியை அடைந்துவிடுகிறார். அதன் பின், உத்தக இராமபுத்திரரும் எட்டாம் தியான ஸமாதியை அடைகிறார். ஏழாம் தியான ஸமாதியை விட, இந்த நிலை மிகவும் மகிழ்வுமிகுந்ததாக இருப்பதை போதிஸத்துவர் உணர்ந்தார். ஆனால், அவர் தேடிய இறுதி நிலை இதுவல்ல. பழைய ஸங்காரங்கள் (பழக்கப் பின்னல்கள்) அவரது மனதின் ஆழ்நிலை மட்டத்தில் உறங்கிக்கொண்டு தான் இருக்கிறது. இவை முற்றிலும் அழிக்கப்படாதவரை, இந்த உயர்ந்த தியான மனக்குவிப்பு அனுபவமும் இறுதி விடுதலை என அழைத்தலாகாது.

இந்த கட்டத்தில், அக்கால ஸமண பரம்பரையில் பிரபலமான அதிதீவிர மிதமிஞ்சிய தன்னைத் தானே வருத்திக்கொள்ளும் பயிற்சிகளை அவர் மேற்கொண்டார். இதனை அவர் ஆறு வருடங்கள் தொடர்ந்து பயிற்சித்தார். ஆனால் அவை பயனற்றது என உணர்ந்து அவைகளை அவர் கைவிட்டார்.

பிறகு அவர் தம் சொந்த முயற்சியினால், விபஸ்ஸனா என்னும் பழமையான பயிற்சி முறையை மீண்டும் கண்டறிந்தார். அதன் பயிற்சியினால், அவர் பூரண விடுதலையை அடைகிறார். துறவு நிலை மேற்கொண்ட நாள் முதல் பூரண ஞானம் அடைந்த வரை தாம் மேற்கொண்ட எல்லா பயிற்சி முறைகளையும் புத்தர் நன்கு விளக்கியிருக்கிறார்.

விருப்பு, வேட்க்கையை வேருடன் நீக்கிய நிலை-கர்மங்களின் மொத்த அழிவு நிலையானது தியான ஸமாதிகளின்(ஜானங்கள்) பயிற்சியினால் மட்டுமே அடைய முடியாது. விபஸ்ஸனா தியானப் பயிற்சியே நிப்பான நிலைக்கு, துன்பங்கள் அனைத்திலிருந்தும் விடுதலை அடையும் நிலைக்கு இட்டுச் செல்கிறது என்னும் ஒப்பில்லா அனுபவமே புத்தரது உயரிய மெஞ்ஞானமாகும்.

ஆகவே தான் புத்தர் இவ்வாறு அறிவித்தார்:

**“யஞ்ச காமஸுகங் லோகே,**
**யஞ்சிதங் திவியங் ஸுகங்;**
**தன்ஹக்கயஸுகஸ்ஸேதே,**
**கலங் நாக்கந்தி ஸோளஸந்தி’தி”**

புலன் இன்பங்களும் தெய்வீக ஆனந்தமும் வேட்கையின் அழிவினால் வரும் இறுதி விடுதலையின் மகிழ்ச்சிக்கு அணு அளவும் ஒப்பிடமுடியாது.

போதிஸத்துவர் பூரண மெஞ்ஞானத்தை அடைந்ததும், அவர் இவ்வாறாக கூறினார்:

**விஸங்காரகதங் சித்தங்,**
**தன்ஹானங் கயமஜ்ஜகா.**

கட்டுக்களிலிருந்து மனம் விடுதலை பெற்றுவிட்டது; வேட்கையின், விருப்பத்தின் முடிவு அடையப்பட்டது.

நித்தியமான, நிரந்தரமான, உன்னதமான நிலையான நிப்பான நிலையை அடைந்ததும், புத்தர் வாழ்நாள் முழுவதும் மற்ற சாதகர்களுக்கு இதே பாதையைக் கற்பித்துக்கொண்டே இருந்தார். பெரும் கருணையுள்ளம் கொண்டு, தாமும் பூரண விடுதலை அடைந்ததுடன், மற்றவர்களும் உண்மையான மகிழ்ச்சியை அடைய அவர் அயராது பாடுபட்டார்.

# கேள்வி பதில்

**ஆத்மா என்பதன் தர்மம் என்ன?**

உங்களை நீங்களே கவனியுங்கள், உங்களுக்குள்ளே என்ன நிகழ்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆத்மா, ஆன்மா என்று நீங்கள் அழைக்கும் ஒன்றானது மனதின் ஒரு பாகமான வினைபுரியும் மனமே. இருப்பினும், "இது தான் நான்", "இது நான்" என்று நீங்கள் ஒரு அறியாமையிலேயே இருந்துவிடுகிறீர்கள். நான் என்ற மாயை போய்விடும், பிறகு, வினைபுரிதலும் அகன்றுவிடும்: உங்களது துன்பமும் நீங்கிவிடும். தத்துவ நம்பிக்கைகளை ஒப்புக்கொள்வதால் மட்டும் இது நடப்பதில்லை.

**விதி என்றால் என்ன?**

நாம் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை ஓட்டமாக ஓடிக்கொண்டே இருக்கிறது. நம் கடந்தகால கர்ம வினைகளை பொறுத்து, நம் வாழ்க்கையின் ஓட்டம் துன்பத்தின் பாதையிலோ அல்லது மகிழ்ச்சியின் பாதையிலோ செல்கிறது. இதற்கு காரணம் நம் சொந்த கர்ம வினைகள் தான்; வேறொருவரும் இதை உருவாக்கியதில்லை. நீங்கள் கடந்தகாலத்தில் செய்த வினைகள் நடந்தாயிற்று; அவைகளை மாற்ற இயலாது. ஆனால், இன்று, இக்கணம் நீங்கள் தான் உங்களுக்கு எஜமானன். உங்களது நிகழ்காலப் பயிற்சியின் மூலம், வாழ்க்கையின் ஓட்டத்தை மாற்ற முடியும். ஆகவே விதியை மாற்றி அமைக்கலாம். நீங்கள் தான் உங்களுக்கு எஜமானன், நிகழ்காலத்தின் எஜமானன்.

**வாழ்வின் இறுதி இலக்கு என்ன?**

இறுதி இலக்கு நிகழ்காலத்தில் தான் உள்ளது. எதிர்காலத்தில் ஏதோவொன்றை நீங்கள் தேடிக்கொண்டிருந்து நிகழ்காலத்தைத் தவறவிடுவது ஒரு மாயையாகும், அறியாமையாகும். அமைதியையும் நல்லிணக்கத்தையும் நீங்கள் இப்பொழுதே அனுபவிப்பீர்களானால், நீங்கள் இறுதி இலக்கான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைவதற்கான சாத்தியக்கூறு நிச்சயம் உள்ளது. ஆகவே, இந்த கணத்தில் அதனை அனுபவியுங்கள். அப்போது தான் நீங்கள் உண்மையில் ஒரு சரியான பாதையில் உள்ளீர்கள். ●